**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 -ம் நாள் வியாழன்கிழமை

**O.S. No. 43 /2024**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW. 1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ஆறுமுகம் | கிராமம் | : | மஞ்சக்குடி |
| | | | தொழில் | : | ரியல்எஸ்டேட் |
| | | | வயது | : | 48 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

நான் சொத்துகளை விற்று வாங்கும் வேலை செய்து வருகிறேன். வழக்கு சொத்திற்கு எனது மனைவியின் பெயரில் உள்ளது என்றால் வழக்கு சொத்தின் ஒரு பகதி மட்டும் மனைவி உரிமை உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி புல எண் 169/4 ல் நஞ்சை பூரா 14 1/2 ஏர்ஸ் ல் 12 1/2 ஏர்ஸ் மட்டும் எனது மனைவிக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி கொடுத்த காலத்தில் எனது பெயருக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். எனது தந்தையார் வழியாக அனுபவித்திலிருந்து எனக்கு கிடைக்கப்பட்டு அந்த சொத்தினை எனது மனைவியின் பெயருக்கு எழுதி வைத்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் வழக்கு சொத்தினை குறித்து பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. வா.சா.ஆ. 7 ஆவணத்தில் நான்கெல்லையில் வடக்கே எனக்கு சொந்தமான நஞ்சை என்றம் கிழக்கே கலியபெருமாள் புஞ்சை என்றும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கில் எனக்கு சொந்தமான இதே புல எண் கொண்ட நஞ்சையானது 1995 லிருந்து எனது வசம் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி நஞ்சை சொத்தில் எனது பெயருக்கு பட்டா அல்லது சிட்டா உள்ளதா என்றால் இல்லை. எனது முந்தை உரிமையாளர் பெயரில் இருந்து வருகிறது. ஆயிஷா பீவி என்பவர் யார் என்றால் எனதுசொத்தின் முந்தைய உரிமையாளரான நூர் முகமது வின் தாயார் ஆவார். ஆயிஷா பீவி பெயரில் பட்டா உள்ளதா என்றால் கூட்டு பட்டாவாக உள்ளது. நான் சொத்தை வாங்குவதற்கு முன் யார் பெயரில் சொத்து உள்ளது என்று பார்ப்பேனா என்றால் பார்ப்பேன்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 6 ஆவணத்தில் ஆயிஷா பீவி பெயரும் செல்வராஜ் என்பவர் பெயரும் உள்ளது என்றால் சரிதான். நான் 1995 ல் சொத்தை வாங்கும்போது ஆயிஷா பீவி பெயர் மட்டுமே பட்டாவில் இருந்தது. நான் ஆயிஷா பீவியிடமிருந்து எப்போது சொத்தை வாங்கினேன் என்றால் ஆயிஷா பீவியிடமிருந்து வாங்கவில்லை நூர் முகமது விடமிருந்து தான் வாங்கினேன். ஆயிஷா பீவியின் மகன் தான் நூர் முகமது என்று காட்டும் ஆவணத்தை எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. பொதுவாக ஒப்பந்தம் முத்திரை தாளில் எழுதப்படவேண்டும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் எழுதினார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை நூர் முகமது தான் அழைத்து சென்றார். ஆவண எழுத்தர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் குடவாசலை சேர்ந்தவர். பி.வா.சா.ஆ. 1 ஆவணம் முத்திரைதாளில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். முத்திரைதாளில் எழுதவில்லை என்றால் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து முத்திரை தாளுக்குரிய தண்டனைத் தொகையை செலுத்த வேண்டும் என்றால் சரிதான். குடவாசல் சார் பதிவாளர் அலுவலகத்தில் முத்திரை தாள்கள் கிடைக்கும் என்றால் சரிதான். நான் முத்திரை தாள் வாங்கி கொண்டு சென்றேனா என்றால் இல்லை. முத்திரை தாள் இருந்திருந்தால் ஒப்பந்தம் எழுதப்பட்ட தேதி தெரிந்து விடும் என்பதால் முத்திரை தாள் எழுதாமல் மோசடியாக வருவாய் முத்திரை மட்டும் ஒட்டி மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குடவாசல் தாலுக்காவில் மஞ்சக்குடி என்ற ஊரும் புதுக்குடி என்ற ஊரும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கிராமம் குறிப்பிட்டுள்ளதில் 51 மஞ்சக்குடி என்று தட்டச்சு செய்யப்பட்டு 52 புதுக்குடி என்று அடித்தல் திருத்தல் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் "முதல் வரி மற்றும் இரண்டாம் வரியில் நாம் அறிவேன்" என்று யார் எழுதினார்கள் என்றால் ஆவண எழுத்தர் எழுதினார். அவ்வாறு எழுதியதில் அவர் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் ஆவண எழுத்தர் பெயரும் விலாசமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவண எழுத்தரை விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் பி.வா.சா. ஆ. 1 ஆவணத்தை மோசடியாக தயார் செய்ததால் தான் கிராமம் அடித்தல் திருத்தலுடன் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து உள்ள இடம் புதுக்குடி என்றால் சரிதான். நான் பி.வா.சா. ஆ.1 ஆவணத்தில் ஆவண எழுத்தர் திருத்தம் செய்யவில்லை என்றாலும் நான் தான் மோசடியாக திருத்தம் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் ரியல்எஸ்டேட் தவிர வேறு தொழில் செய்கிறேனா என்றால் அதை தவிர விவசாயம் மட்டும் செய்கிறேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்தும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள சொத்தும் ஒரே சொத்துதானா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கெல்லையில் வடக்கு புறம் சிமிழி வாய்க்கால் உள்ளதா என்று காட்டப்படுகிறது

என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்திலும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலும் நான்கெல்லையில் மாற்றம் உள்ளது என்றால் வா.சா. 7 ஆவணத்தில் வடக்கில் எனது நஞ்சையான 2 ஏர்ஸை செட்டில்மென்ட் செய்யவில்லை. அதை தான் வடக்கு எல்லையாக குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்திற்கு வடக்கே வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 2 ஏர்ஸ் க்கு பட்டா எனது பெயரில் உள்ளதா என்றால் இல்லை. நான் செட்டில்மென்ட் எழுதி வைத்த பிறகும் இன்றுவரை நூர் முகமதுவின் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். பொதுவாக வங்கியில் கடன்பெற சிட்டா அடங்கல் ஆவணத்தை கேட்கிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் சிட்டா ஆவணத்தை சேர்த்து வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அந்த சிட்டா அடங்கலில் எனது பெயர் உள்ளது என்றால் சரிதான். பட்டாவை எனது பெயரில் மாற்றுவதற்கு மனு செய்தேனா என்றால் இல்லை. நூர் முகமது தான் மாற்றி கொடுத்தார். கிரயம் பெறப்பட்டவர்கள் தான் பட்டா மாற்ற மனு செய்ய வேண்டும் என்றாலும் கிரயம் கொடுத்தவர்கள் மனு செய்யபமுடியாது என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்ததை நான் மோசடியாக தயார் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. நான் ஆறுமுகமிடம் இருந்து சொத்தை வாங்கிய கிரய உடன் படிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் அந்த ஆவணத்தை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். வாதியிடமிருந்து வழக்கு சொத்தை அபகரிப்பதற்காக மோசடியான ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் தான் செல்லும் என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை என்பதால் பி.வாசா.ஆ. 1 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மோசடியான ஆவணங்களை தயார் செய்ததால் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 340 ன் கீழ் நடவடிக்கை எடுக்கபடும் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. 1ம் வாதி தகப்பனார் செல்வராஜ் என்றால் சரிதான். செல்வராஜ் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. செல்வராஜிக்கு தெரிந்து தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் உரிமையுள்ளதாக சொல்லி அனுபவ பாத்தியம் உள்ளதாக கேட்கமுடியாது என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1995 லிருந்து எனது அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையிலும் பிரமாணப்பத்திரத்திலும் முன்னுக்கு பின்னாக உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காட்டு கருவை மரம் வழக்கு சொத்தில் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்து இரண்டு பகுதிகளாக இருப்பதாக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர் வழக்குரையில் 12 1/2 ஏர்ஸ் தனியாகவும் 2 ஏர்ஸ் தனியாகவும் இரண்டு பிரிவுகளா இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.26 11:21:32 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.